**வீயெஸ்வி**

*இசை கேட்டால் புவி அசைந்தாடும் - அது*
*இறைவன் அருளாகும்*
*ஏழாம் கடலும் வானும் நிலவும்*
*என்னுடன் விளையாடும் - இசை*
*என்னிடம் உருவாகும்!*

**- கவியரசு கண்ணதாசன்**

ஏந்த ராகத்தையும் சவலைப்பிள்ளை மாதிரி 'ட்ரீட்' செய்வதில்லை சஞ்சய் சுப்ரமண்யன். யு.கே.ஜி., படிக்கும் குழந்தையை எழுப்பி, பல் தேய்த்துக் குளிப்பாட்டி, டிபன் ஊட்டி, தலைவாரி, டிரெஸ் பண்ணி, ரிக்ஷாவில் ஏற்றி அனுப்புவது மாதிரிதான் ஒவ்வொரு ராகத்துக்கும் பாசத்துடன் மெனக்கெடுகிறார் சஞ்சய்!

நாரத கான சபாவில் வராளி, மோகனம் இரண்டு ராகங்களுக்கும் அசத்தல் 'பில்டப்' கொடுத்தார். 'ஏடி ஜன்மமிதி' (வராளி) பாடலில் சரணத்தில் வரும், 'ஸாடிலே நி மாரகோடி லாவண்யுகி' வரியில், 'ஸாடிலே' என்ற வார்த்தைக்கு அடுத்தடுத்து இவர் கொடுத்த வளைவுகள், கடின உழைப்பும் அசுர சாதகமும் இருந்தால் மட்டுமே சாத்தியம்!

அதிகம் பாடப்படாமல், மேளகர்த்தா வரிசையில் மட்டுமே உள்ள சூலினி என்ற ராகத்தை (35-வது) மெயினாக எடுத்துக்கொண்டு, நெளிவு சுளிவுகளோடு அதை விரிவுபடுத்தி வியக்கவைத்தார். சுருதி துளியும் விலகாமல் மேல் சட்ஜமத்தில் கார்வை கொடுத்து நீண்ட நேரத்துக்கு 'தம்' பிடித்து நிற்பது சஞ்சய் ஸ்பெஷல்.


காரைக்குடி மணி கிருஷ்ணன்

பின்னால் வந்தது பிருந்தாவன சாரங்கா. எந்த இந்துஸ்தானி உஸ்தாதுடனும் ஒன்டிக்கு ஒண்டி நின்று ஜெயிக்கக்கூடிய சூப்பர் ஆலாபனை! 'நாதனை தினம் தினம் நினை மனமே... பிருந்தாவன சாரங்க ரங்கநாதனை...' என்பது பல்லவி வரி. அன்று கச்சேரிக்கு வந்தவர்கள், இந்த பிருந்தாவன சாரங்காவை தினம் தினம் நினைத்துப் பாராட்டிக்கொண்டு இருப்பதாகத் தகவல்!



அருண் பிரகாஷ் (மிருதங்கம்), உடுப்பி ஸ்ரீதர் (கடம்) வாசித்த தனி, ஷார்ட் அண்ட் ஸ்வீட்!

டைரக்டர் தரணியின் 'தூள்' மற்றும் 'கில்லி' படங்களுக்கு இணையானது சுதா ரகுநாதனின் பாட்டுக் கச்சேரி! நூறு சதவிகித விறுவிறுப்பு இவரிடமும் எப்போதும் உத்தரவாதம். பார்த்தசாரதி சுவாமி சபாவில், ஸாவேரி வர்ணத்தில் ஆரம்பித்து, சுரடி தில்லானாவில் சுதா முடித்தபோது, 'அட... மூன்று மணி நேரம் அதற்குள் பறந்தோடிவிட்டதா?' என்ற வியப்புதான் மேலிட்டது!

இரண்டாவது பாடலாக, சண்முகப்ரியாவில் 'சித்தி விநாயகம்'. எத்தனை முறை பாடினாலும் கேட்கத் திகட்டாத ராகம். சலிப்பு ஏற்படுத்தாத பாடல். ஆக, கச்சேரிக்குப் பட்டியல் போட்டுப் பாடும் இளசுகளுக்கு இதெல்லாம் கோனார் நோட்ஸ் மாதிரி!

பிரதானமாக கரகரப்ரியா. இந்த ராகத்தில் புகுந்து விளையாட ஸ்கோப் அதிகம். மூன்று ஸ்தாயிகளிலும் நின்று நிதானமாக வீடு கட்டலாம். கட்டினார் சுதா!

நித்யஸ்ரீ






'சக்கனிராஜ...'வில், 'குருநாதர் எம்.எல்.வி., போட்டுக் கொடுத்துப் பட்டைத் தீட்டிய பாதை இருக்கும்போது, எனக்கு என்ன கவலை?' என்று கேட்பது போல் சொகுசாகப் பயணித்தார் சுதா.

ரஞ்சனி-காயத்ரி சகோதரிகள் ஸ்டைலை மாற்றிக்கொண்டுவிட்டார்கள். ஹேர் ஸ்டைலை அல்ல; பாடும் ஸ்டைலை! பழைய தாம் தூம் ஆர்ப்பாட்டங்களையெல்லாம் குறைத்துக்கொண்டு, அமைதி வழிக்குத் திரும்பிவிட்டார்கள். எல்லாம் நல்லதுக்கே!

மியூஸிக் அகாடமியில், கச்சேரிக்கு வந்தவர்களையெல்லாம் இளக்கி உருக்கிவிடும்விதமாக தன்யாசியையும் யதுகுல காம்போதியையும் குழைத்துத் தந்தார்கள். மெயினாக எடுத்துக்கொண்ட கல்யாணியிலும் எடுத்த எடுப்பில் மேலே தாவிச் செல்லாமல், கீழ் காலத்திலேயே ரொம்ப நேரத்துக்கு உழன்று, திரிந்து உத்தமியானார்கள்!

முடிவாக, லலித் ராகத்தில் சுவாமி ஸ்வரூபனந்தா இயற்றியிருக்கும் அபங்கம் பாட்லை இவர்கள் பாடியபோது, ஏகத்துக்கும் கைத்தட்டல்கள்!

அதென்ன, யார் அபங் பாடினாலும் நம்மவர்கள் இப்படி வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கிறார்கள்? வடநாட்டு வித்வான்கள் அங்கே தமிழில் பக்திப் பாடல்களைப் பாடுகிறார்களோ? அப்படியே பாடினாலும், ரசிகர்கள் அங்கே காணாததைத் கண்டது போல் பூரிக்கிறார்களோ?!


சஞ்சய் சுப்ரமண்யன்

காரில் வரும்போதே பாடிக்கொண்டுதான் வருவார் போலிருக்கிறது நித்யஸ்ரீ- மேடையேறியதும் இவருக்கு 'warm up' எல்லாம் தேவைப்படுவதில்லை. எடுத்த எடுப்பில் ஆக்ஸிலேட்டரை அழுத்திவிடுகிறார்!





சுதா ரகுநாதன்

கலாரசனா கச்சேரியில், ஹைலைட்- நித்யஸ்ரீ பாடிய ராகம், தானம், பல்லவி. கமலா மனோகரி, பாகேஸ்வரி, விஜயநாகரி என்ற மூன்று ராகங்களைப் பல்லவிக்கு எடுத்துக்கொண்டு, அதில் வாசமிகு மாலைகள் தொடுத்தார். ஸ்வரம் பாடும் போது இந்த மூன்று ராகங்களையும் புரட்டிப் போட்டதோடு, போனஸாக ராகமாலிகையாக வேறு சில ராகங்களையும் இணைத்து, நித்யஸ்ரீ கதம்ப மணிமாலை வழங்கியது கன கிராண்ட்!

மேடையில், நித்யஸ்ரீயுடன் தனி மைக்குடன் உட்கார்ந்து பாடிய அந்த பாவாடைச் சட்டைச் சிறுமி லாவண்யா, நித்யஸ்ரீயின் மூத்த சகோதரி காயத்ரியின் மகள்.

கடந்த ஆகஸ்ட் மாதம், நியூ ஜெர்ஸியில் (அமெரிக்கா) ஒரு மாலை நேரத்தில் 'வாக்' போய்க் கொண்டு இருந்த மிருதங்க வித்வான் காரைக்குடி மணி, தடுக்கிக் கீழே விழுந்துவிட, காலில் எலும்பு முறிவு.

அங்கு அவசர சிகிச்சை பெற்றுக்கொண்டு, ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகள் எதையும் ரத்துசெய்யாமல் முடித்துக் கொடுத்துவிட்டு, செப்டம்பரில் இந்தியா திரும்பினார்.

கால் வலி குறையவில்லை. சிகிச்சை தொடர்ந்தது. இரண்டு மாதம் பெட் ரெஸ்ட்! அப்படியும் கூட பூரணமாக குணமாகவில்லை. இப்போது புத்தூர் கட்டு போட்டுக் கொண்டு இருக்கிறார். இந்த நிலையிலும், டிசம்பர் சீஸனில் ஒப்புக்கொண்ட கச்சேரிகளை ஒதுக்கித்தள்ளாமல், வாசித்துக் கொண்டு இருக்கிறார்.

இரண்டு தும்மல் போட்டாலே நான்கு கச்சேரிகளை கேன்சல் செய்துவிடும் இன்றைய கலைஞர்களுக்கு மத்தியில் இப்படியும் ஒருவர்!

இன்னொரு விஷயம்- சீஸன்